செய்தி வெளியீட்டு எண்.105 நாள்: 2.2.2010

# <u>நெடுஞ்சாலைத்துறையில் பணியாற்ற ஒரு தணிக்கை உதவியாளர் மற்றும் 23 பதிவுரு எழுத்தர்களுக்கு பணிநியமன ஆணைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் வழங்கினார்</u>

நெடுஞ்சாலைத்துறையில் பல்வேறு பதவிகளில் உள்ள காலிப் பணியிடங்களை பதவி உயர்வு மூலம் மட்டுமல்லாது அனுமதிக்கப்பட்ட பல்வேறு நேரடி பணிநியமன முறைகள் மூலமாகவும் நிரப்பிட தொடர் நடவடிக்கைகள் இந்த அரசின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு, நெடுஞ்சாலைத்துறையில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாக

| | | |
|---|---|---|
| உதவிப் பொறியாளர் | – | 295 |
| இளநிலை உதவியாளர் | – | 53 |
| தட்டச்சர் | – | 38 |
| சுருக்கு தட்டச்சர் | – | 6 |
| தணிக்கை உதவியாளர் | – | 16 |

என மொத்தம் 408 இடங்கள் நிரப்பட்டுள்ளன.

மேலும் கருணை அடிப்படையில்

| | | |
|---|---|---|
| இளநிலை பொறியாளர் | – | 1 |
| இளநிலை உதவியாளர் | – | 45 |
| தட்டச்சர் | – | 54 |
| பதிவுரு எழுத்தர் | – | 70 |
| சாலைப் பணியாளர் | – | 300 |

என மொத்தம் 470 இடங்களும் ;

வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக

| | | |
|---|---|---|
| சுருக்கு தட்டச்சர் | – | 2 |
| தட்டச்சர் | – | 33 |
| இளநிலை வரைதொழில் அலுவலர் | – | 140 |
| சாலை ஆய்வாளர் நிலை–II | - | 362 |

என மொத்தம் 537 பணியிடங்கள் நிரப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, இன்று (2.2.2010) மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத்துறைக்காக தேர்வாணையம் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தணிக்கை உதவியாளர் மற்றும் கருணை அடிப்படையில் 23 பதிவுரு எழுத்தர் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார். முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான இவ்வரசு 2006ஆம் ஆண்டில் பதவியேற்றபின் இதுவரை நெடுஞ்சாலைத்துறையில் மொத்தம் 1439 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.வெள்ளக்கோவில் மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத்துறைச் செயலாளர் திரு.ஜி. சந்தானம், முதன்மை பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) திரு. ஒய்.ஆர். பாலாஜி ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.